

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 96 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 29 – புதன்கிழமை 15 நவம்பர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 96: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 29 - Wednesday 15 November 2023 - Dak 10 Pages ₹ 5.00


## பால் வளத்துறை சார்பில்

# ரூ. 12 கோடி செலவில் புதிய கட்டடங்கள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2023) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை சார்பில் ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவியின் மூலம் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடங்கள், தருமபுரியில் அலுவலகத்துடன் கூடிய பால் கொள்முதல் பிரிவுக் கட்டடம், திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு, திருப்பூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கான அலுவலகக் கட்டடம், என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.வினீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 15-**

**பால்வளத்துறை சார்பில் ரூ.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை தீவனம் மற்றும் மூலப்பொருட்கள் சேமிப்புக் கிடங்கு, பால் உற்பத்தியாளர் ஒன்றிய அலுவலகக் கட்டடம், பால் பவுடர் சேமிக்கும் கிடங்கு, பயிற்சி நிலையம், மகளிர் விடுதி, நூலகம், ஆய்வுக் கூடம் மற்றும் திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2023) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை சார்பில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்புக் கிடங்கு, திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவியின் மூலம் 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடங்கள், தருமபுரியில் 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் அலுவலகத்துடன் கூடிய பால் கொள்முதல் பிரிவுக் கட்டடம், திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு, திருப்பூரில் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கான அலுவலகக் கட்டடம், என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,578 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சராசரியாக 33 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து தனது 4 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் 30 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை பெற்று, சிறப்பாக செயலாற்றி வருகிறது.

### ஈரோட்டில் கால்நடை தீவன சேமிப்புக் கிடங்கு!

ஈரோடு மாவட்டத்தில் தீவன உற்பத்தி திறன் தற்போது நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன்னாக தரம் உயர்த்தப்பட்டு, கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே அதிகரித்துள்ள உற்பத்திக்கான மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தீவனத்தினை சேமித்து வைப்பதற்காகவும், தரமான கால்நடை தீவனத்தை வழங்கி பால் உற்பத்தியை அதிகரிக்கவும், 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு;

### திருநெல்வேலியில் பயிற்சி நிலையம்!

திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்க இயலாத நிலை இருந்து வருகிறது. மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தின் கீழ், 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிருக்கான நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடம்;

### தருமபுரியில் ஒன்றிய அலுவலகக் கட்டடம்!

தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆகஸ்ட் 2019 அன்று முதல் கிருஷ்ணகிரி ஒன்றியத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது தனியே அலுவலகக் கட்டடம் இல்லாததால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியின் கீழ் தருமபுரியில் 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் பால் கொள்முதல் பிரிவு கட்டடம்;

### திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் சேமிப்புக் கிடங்கு!

திருவண்ணாமலை பால் பவுடர் ஆலையில் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி திறனில் மாவட்ட ஒன்றியங்களின் உபரிப் பாலை உருமாற்றம் செய்து சேமித்து வைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. தற்போது 1500 மெட்ரிக் டன் கிடங்கு உள்ளது. அதிக உற்பத்தி காலத்தில் கிடங்கின் கொள்ளளவு போக மாவட்ட ஒன்றியங்கள் தங்களின் பால் பவுடரை தனியார் மற்றும் இதர சேமிப்புக் கிடங்குகளில் வாடகைக்கு வைத்துள்ளதால் கூடுதல் செலவீனம் ஏற்பட்டு வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிதியின் மூலம் ரூ. 2 கோடியே 93 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்பு கிடங்கு;

### திருப்பூரில் ஒன்றிய அலுவலகக் கட்டடம்!

திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் டிசம்பர் 2018 அன்று முதல் ஈரோடு ஒன்றியத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது தனியே அலுவலகக் கட்டடம் இல்லாததால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பூரில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்; என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் பால்வளத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பால் உற்பத்தி மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.வினீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடகிழக்கு பருவமழை தீவிரம்!

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் விரைந்து ஈடுபடுவீர்!

### ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வலியுறுத்தல்!

*சென்னை, நவ. 15 -*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது - பல்வேறு மாவட்டங்களில் கனமழை முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தார்.*

*வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 13.11.2023 வரை 221.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 17 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 13.11.2023 முடிய, 8 மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவும், 7 மாவட்டங்களில் இயல்பான மழைப்பொழிவும், 23 மாவட்டங்களில் குறைவான மழைப்பொழிவும், ஏற்பட்டுள்ளது.*

*நேற்று (14.11.2023) காலை 8.30 மணி வரை 35 மாவட்டங்களில் 13.25 மி.மீ. மழை பெய்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 11.3 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. 5 இடங்களில் மிக கனமழையும், 30 இடங்களில் கனமழையும் பதிவாகியுள்ளது.*

*முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.09.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி, வடகிழக்குப் பருவமழைக்கென மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.*

*இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 13.11.2023ம் நாளிட்ட அறிவிக்கையில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை ஏற்பட கூடுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 27 மாவட்டங்களில் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் 13.11.2023 நாளிட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக, அரியலூர், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாலை மாவட்டத்தில் பள்ளிகளுக்கும், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வகோட்டை மற்றும் கரம்பக்குடி ஆகிய இரு வட்டங்களிலும் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், 13.11.2023 மற்றும் 14.11.2023 நாட்களில் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று*

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

## தமிழ்நாடு – புதுச்சேரியில் 8 ஆயிரத்து 647 கிலோமீட்டர் பயணம்!

# இளைஞர் அணி மாநாட்டையொட்டி இரு சக்கர வாகனப் பிரச்சாரம்!

### கன்னியாகுமரியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று துவக்கி வைக்கிறார்!

குமரி, நவ. 15 -

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி கன்னியாகுமரியில் மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

2வது தி.மு.க. இளைஞர் அணி மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ளது.

இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணி கன்னியாகுமரியில் இன்று தொடங்குகிறது.

கன்னியாகுமரி திருவள்ளுர் சிலை அருகே நடைபெற உள்ள நிகழ்ச்சியில் தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை தொடங்கி வைக்கிறார்.



இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியில் 188 இருசக்கர வாகனங்கள் பங்கேற்கின்றன.

38 மாவட்டங்களில் 234 சட்டமன்றத் தொகுதிகளில் பயணிக்க உள்ளது. இன்று தொடங்கும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியானது மொத்தம் 13 நாட்கள் பயணித்து வரும் 27ஆம் தேதி முடிவடைகிறது.

### நான்கு மண்டலங்களாகப் பிரிப்பு!

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி 504 பிரச்சார மையங்கள், 38 தெருமுனை பிரச்சாரம் நடைபெற உள்ளது.

இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணி செல்லும் மாவட்டங்கள் வள்ளுவர், பெரியார், அண்ணா, கலைஞர் என 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 8 ஆயிரத்து 647 கிலோ மீட்டர் பயணித்து சுமார் 3 லட்சம் இளைஞர்களை நேரில் சந்தித்து மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

## தயார் நிலையில் வைத்திருக்க வலியுறுத்தி

# மாவட்ட ஆட்சியர்களுக்கு வருவாய்த்துறை கடிதம்!

*சென்னை, நவ. 15 -*

*வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் பிரபாகர் எழுதியுள்ள கடிதத்தில், வானிலை ஆய்வு மையங்கள் கனமழை முதல் மிக கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளதால்,*

*ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூர், நெல்லை, சிவகங்கை, பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருச்சி, விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய 27 மாவட்ட மாவட்ட நிர்வாகங்களை தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*பேரிடர்களைக் கையாள்வதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், முழு மாவட்ட நிர்வாகங்களை தயார்படுத்தவும் மாவட்ட ஆட்சியர்களை வருவாய்த்துறை கேட்டுக் கொண்டுள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 15-11-2023

# ஆளுநர்கள் தலையில் இடி - 2

தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, முகுல் ரோத்தகி, பி.வில்சன் ஆகியோர் வலிமையான வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

**“கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீர் வரை எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் அரசியல் சாசன நெறி முறைகளுக்கு எதிரான செயல்களை செய்து வருகிறார்கள். இது ஆளுநர்களுக்கு பிடித்த நோய் போல உள்ளது. தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் இதே வகையான பிரச்சினைகளுடன் உச்சநீதி மன்றத்தை அணுக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்கள் மற்றும் அரசின் தீர்மானங்களுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கொடுக்காமல் ஆளுநர் கிடப்பில் போடுவதால் அரசுப் பணிகள் முடங்குகிறது. டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனம் தொடர்பான கோப்புகள் கூட ஆளுநரிடம் முடங்கிக் கிடக்கிறது. ஆணையத் தலைவர் உள்ளிட்ட 14 உறுப்பினர் பதவிகளில் 10 பணியிடங்களை நிரப்ப முடியவில்லை . டி.என்.பி.எஸ்.சி. தலைவர் உள்ளிட்ட அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முழு அதிகாரம் இல்லாமல் அரசு ஆட் சேர்ப்பு செய்ய முடியாது”** என்ற வாதங்களை அரசு சார்பில் வழக்கறிஞர்கள் வைத்தார்கள்.

**“மாநில அரசுக்கு எதிராக ஆளுநர் செயல்பட அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. அரசியலமைப்பின் பிரிவு 200, மசோதாக்களை ‘கூடிய விரைவில்’ கையாள வேண்டும் என்று கோருகிறது. ஆனால், As soon as possible என்ற வாக்கியத்தை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தவறாக புரிந்து கொண்டு தவறாக செயல்படுகிறார். அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருகிறார். ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசியல் சாசனத்திற்கு எதிராகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதால் அவர் செயல் இழந்து விட்டார்” என தமிழ்நாடு அரசின் சார்பில் வாதங்கள் வைக்கப்பட்டது.**

மசோதாக்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைக் கையாளும் போது உச்சநீதிமன்றத்தால் ஆளுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டிய காலக்கெடு குறித்து பரிசீலிக்கக்கூடிய 5 சட்ட முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வழங்கினார். அரசியலமைப்பின் 91வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவருக்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு 6 வாரங்கள் என்றும் அது ஆளுநர்களுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதிட்டது. இந்த வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், மிகக்கடுமையாக ஆளுநரை விமர்சித்துள்ளார்கள்.

**“அரசியல் சாசனம் 200வது பிரிவின் கீழ், சட்டப் பேரவையில் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட உடன், உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஆளுநரின் செயல்பாடுகள் தாமதமாகி, மசோதாக்கள் கிடப்பில் உள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மிக முக்கியமானவை. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது. அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இதைத்தான் செய்ய வேண்டும். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது”** என்று நீதிபதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.

தமிழ்நாடு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் ரவி எப்படி குட்டுப்பட்டாரோ அதேபோல, பஞ்சாப் மாநில அரசு தொடர்ந்த வழக்கில் அந்த மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித் குட்டுப்பட்டுள்ளார்.

**“சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது. மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில் போட்டிருப்பார்? ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார். சட்டமன்றம் கூட்டப்பட்ட முறை சரியல்ல என்று கூறி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று ஆளுநர் எப்படி கூறமுடியும்? மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்றத்தின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று எப்படி கூறமுடியும்? இது மிகவும் கவலை அளிக்கும் விவகாரம். நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தைத்தான் தொடர்கிறோமா? சபாநாயகர் சட்டமன்றத்தை கூட்டியது தவறு என்று எப்படி சொல்ல முடியும்? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆளுநர் அப்படி கூறினார்? சட்டமன்றம் கூட்டப்பட்டது சரியல்ல என்று கூறி 4 மசோதாக்களை நிலுவையில் வைத்திருக்க முடியாது; இதுபோன்ற அதிகாரங்களை ஆளுநர்கள் கையில் எடுக்க முடியாது; இது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது. ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது”** என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் நெத்தியடி அடித்துள்ளார்கள்.

**“மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிக அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குபவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சாசனம் இயற்றப்பட்டுள்ளது. ஆளுநருக்கான அதிகாரம் என்ன என்பதை முந்தைய தீர்ப்புகள் உறுதி செய்துள்ளன”** என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

பிரெஞ்சு தேசத்தில் பதினான்காம் லூயி நினைத்ததைப் போல, ‘I AM THE STATE’ என்று நினைத்துக் கொள்ளும் ஆளுநர் ரவி உள்ளிட்ட அதிகப்பிரசங்கிகளுக்கு தலையில் இடியாய் இறங்கி இருக்கிறது உச்சநீதிமன்றம்.

●●




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (14.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் உடனிருந்தனர்.

## நீதியரசர் கே.சந்துரு தலைமையிலான

# கூர்நோக்கு இல்ல மேம்பாடு குறித்த ஒரு நபர் குழு அறிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு!

**சென்னை, நவ. 15 -**

**கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பித்தது.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (14.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே. சந்துரு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்கள் தலைமையில் ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சார்பாக ஒரு பிரதிநிதியும் உள்ளடக்கிய உயர்மட்டக்குழு ஒன்று உருவாக்கப்படும் என்று 6.2.2023 அன்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்.


அந்த அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக, கடந்த 11.04.2023 அன்று இளைஞர் நீதி அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து அரசு ஆணையிட்டது.

அதன்படி, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவானது கடந்த 2.5.2023 முதல் பொறுப்பேற்றதுடன் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்த ஏதுவாக பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்பட்டது. அதோடு மட்டுமல்லாது மேற்படி ஒரு நபர் குழுவானது மாநிலத்தில் செயல்பட்டு வரும் அனைத்து கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு மேற்கொண்டது.

அதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவானது, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் மற்றும் நீதியரசரின் ஆய்வின் அடிப்படையில் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டு, நேற்று முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்களின் மகள் சக்தி ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





ஆத்தூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை சார்பாக நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாண வர்களுக்கு பருவத்தேர்வு கல்வி கட்டணத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலாத்தூர் பி.ஆர்.மஹாலில் மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பரிவர்த்தனை அட்டையை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட கவுன்சிலர் நேருபாண்டியன், மேற்கு ஒன்றிய சேர்மன் வீரராகவன், ஆலாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா ராஜவேல், கழக மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஒன்றியச் செயலாளர் சிறைச்செல்வன், பகுதி செயலாளர் பெ.சசிக்குமார் உள்ளிட்ட அதிகாரிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### பொய் பிம்பத்தை கட்டமைத்திருக்கும் பா.ஜ.க.விற்கு

# ஐந்து மாநில தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவது உறுதி!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, நவ. 15 -

பொய் பிம்பத்தை கட்டமைத்திருக்கும் பா.ஜ.க. விற்கு 5 மாநில தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவது உறுதி என கருத்துக் கணிப்புகள் கட்டியம் போட்டு காட்டியுள்ளதாக “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

மத்திய பிரதேசம். சட்டீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் மிசோரம் மாநிலங்களில் சட்டசபை பதவி காலம் முடிவடைவதால் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, 40 தொகுதிகளை கொண்ட மிசோரம் மாநிலத்துக்கு ஒரே கட்டமாக கடந்த 7ம் தேதி வாக்குப் பதிவு முடிந்து விட்டது. சட்டீஸ்கர் மாநிலத்தில் 20 தொகுதிகளுக்கும் தேர்தல் முடிந்து விட்டது. மீதம் உள்ள 70 தொகுதிகளுக்கும், மத்திய பிரதேசத்தில் உள்ள 230 தொகுதிகளுக்கு 17ம் தேதியும், ராஜஸ்தானில் 25ம் தேதியும், தெலுங்கானாவில் 30ம் தேதியும் தேர்தல் நடக்கிறது. இந்த மாநிலங்களில் பதிவான ஓட்டு எண்ணிக்கை டிசம்பர் 3ம் தேதி நடக்கிறது. 5 மாநில தேர்தலையொட்டி ஒவ்வொரு கட்சிகளும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. தலைவர்கள் வாக்குசேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



தினகரன்

நவம்பர் 14, 2023 செவ்வாய்க்கிழமை

பொய் பிம்பம்

ஒன்றிய அரசின் ஆட்சியை மத்திய பிரதேச பிரச்சாரத்தில் ராகுல் கடுமையாக பேசினார். ஆனால் பிரதமர் மோடி பழைய பல்லவியை பேசி வருகிறார். கடந்த ஒன்பதரை ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஒன்றிய ஆட்சியின் சாதனைகள், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தது மற்றும் மக்கள் பணி சாதனைகளை கூறாமல் காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் செய்ததாக திரும்ப திரும்ப பிரச்சாரத்தில் பேசுவது அரைத்த மாவையே அரைப்பதாகவும், பொய் பிரச்சாரம் மட்டுமே செய்வதாக குறை கூறும் எதிர்க்கட்சிகள், மோடி ஆட்சியில் சி.ஏ.ஜி. அறிக்கை கூறிய ஊழல்களை பட்டியல் போடுகின்றனர்.

உதான்திட்டத்துக்காக ஒன்றிய அரசு 1,089 கோடி ரூபாயை ஒதுக்கியது. திட்டமிடப்பட்ட 774 வழித்தடங்களில் விமான சேவை வழங்க முடிவு செய்ததில் 7 விழுக்காடு தடங்களில் மட்டுமே விமானங்கள் இயக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் சேலம், தஞ்சாவூர், ராமநாதபுரம், வேலூர் நகரங்களுக்கு உதான் திட்டத்தில் விமான சேவை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் சேலத்துக்கு மட்டும்தான் உதான் திட்டத்தில் விமானம் இயக்கப்பட்டது. அதுவும் இப்போது இல்லை. 2021-22ம் ஆண்டில் ரயில்வே துறை, 100 ரூபாய் வருவாய் ஈட்டுவதற்காக 107 ரூபாய் செலவழித்து இருப்பதாகவும், இதனால் இந்திய ரயில்வேயின் நிதிநிலை கவலைக்குரியதாக மாறி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் பல்வேறு ஓய்வூதிய திட்டங்களில் 2017 முதல் 2021ம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி, ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்கு பயன்படுத்தப்பட்டு முறைகேடு நடந்திருக்கிறது என்று அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறைகேடுகளுக்கெல்லாம் உச்சம், டோல் பிளாசா முறைகேடுதான். 5 டோல் பிளாசாக்களை மட்டும் தணிக்கை செய்ததில், விதிகளுக்குப் புறம்பாக, வாகன ஓட்டிகளிடம் இருந்து 132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசூலித்துள்ளது. இதுபோன்று பாரத்மாலா என்ற திட்டம், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ஊழல் நடந்துள்ளதாம்.

அயோத்தியா திட்டம் முதல் ஆயுஷ்மான் பாரத் திட்டம் வரை 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. குற்றம்சாட்டி உள்ளது. இதுவரைக்கும் இதற்கு பிரதமரோ ஒன்றிய அமைச்சர்களோ பதில் சொல்லவில்லை. பொய் பிம்பத்தை கட்டமைத்திருக்கும் பா.ஜ.வுக்கு 5 மாநில தேர்தலில் தகுந்த பாடம் ‘கிடைக்கும் என்பதையே கருத்து கணிப்புகள் கட்டியம் போட்டு காட்டியுள்ளது.


இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ. 15 -

இந்திய நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான குழந்தைகள் தினத்தையொட்டி, நேரு அவர்களின் பொன்மொழியை குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**இன்றைய குழந்தைகள்தான் நாளைய இந்தியாவை உருவாக்குவார்கள். நாம் அவர்களை வளர்க்கும் விதம்தான் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### எந்நாளும் ‘மக்கள் நலன்’ குறித்தே கவலைப்படும் மதிப்புமிக்க தலைவர்

# தோழர் என்.சங்கரய்யா விரைவில் குணமடைய வாழ்த்துகள்!

## இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, நவ. 15 -

எந்நாளும் மக்கள் நலன் குறித்தே கவலைப் படும் மதிப்பு மிக்க தலைவர் - கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் மூத்த தலைவர் தோழர் என். சங்கரய்யா விரைவில் குணமடைய வாழ்த்துகள் என்று இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தோழர். என். சங்கரய்யா விரைவில் குணமடைய வாழ்த்துகள்.

கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் மூத்த தலைவரும், விடுதலைப் போராட்ட வீரரும் தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது பெற்றவருமான மதிப்பிற்குரிய தோழர் என்.சங்கரய்யா அவர்கள், உடல்நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 102 வயதான போதும், நல்ல நினைவாற்றல், கம்பீர குரல் இருப்பது மட்டுமல்ல, எந்நாளும் மக்கள் நலன் குறித்தே கவலைப் படும் மதிப்புமிக்க தலைவராவார்.

பொதுவாழ்வில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக விளங்கும் தோழர்.என்.சங்கரய்யா விரைவில் பரிபூரண குணமடைந்திட வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு இரா.முத்தரசன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வலியுறுத்தல்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், இந்த தகவலை ஆழ்கடலில் உள்ள மீனவர்களுக்கும், கரையில் உள்ள மீனவர்களுக்கும் தெரிவிக்குமாறு மீன்வளத்துறை ஆணையர் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்து சென்று முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாநில / மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளுடனும், கூடுதலான அலுவலர்களுடனும் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள், Whatsapp எண்.94458 69848 மூலம் புகார்களை பதிவு செய்யலாம்.

424 கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகள் மூலம் சைரன் ஒலி, நேரடி ஒளிபரப்பு மூலம் எச்சரிக்கைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை செய்திகள் பரப்பப்படுகின்றன.

பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு புயல், வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TNSMART செயலி மூலமாகவும், அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் வானிலை முன்னறிவிப்பு, வெள்ள அபாய எச்சரிக்கை மற்றும் மின்னல் எச்சரிக்கை வழங்கப்படுகிறது.

கடலோர மாவட்டங்களில் 1.13 இலட்சம் நபர்கள் தங்கும் வகையில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

பள்ளிகள், கல்லூரிகள், சமூகக் கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் என மொத்தம் 4967 நிவாரண முகாம்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தமட்டில் 169 நிவாரண முகாம்கள் உள்ளதோடு, மழைநீரை வெளியேற்ற 260 பம்புகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் தேடல், மீட்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழனி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 400 வீரர்கள் கொண்ட 12 குழுக்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 200 நபர்கள் அரக்கோணம் மற்றும் சென்னையில் தயார் நிலையில் உள்ளனர்.

பாதிப்பிற்குள்ளாகும் மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும், நிவாரண முகாம்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, மின்சாரம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும்;

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் சேதமடைந்த குடிசை/வீடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ். கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி.அ.ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# இலங்கைக்கு தெற்கே நடுக்கடலில் நிலநடுக்கம்!

## கடலுக்கு அடியில் ரிக்டர் 6.2 ஆக பதிவு!

கொழும்பு, நவ. 15 -

இலங்கைக்கு தெற்கே நடுக்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் நேற்று ஏற்பட்டது. இது ரிக்டரில் 6.2 ஆக பதிவாகி இருந்தது.

இலங்கையின் தென்கிழக்கில் இந்திய பெருங்கடல் பரப்பில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தியப் பெருங்கடலில் கடலுக்கு அடியே 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் உணரப் பட்டது.

இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து தென் கிழக்கில் 1326 கி.மீ. தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. இலங்கை தலைநகர் கொழும்பில் நிலநடுக்கம் மிக கடுமையாக உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்த போதும் இலங்கைக்கு இந்த நிலநடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் என்பதால் சுனாமி பேரலை உள்ளிட்ட அச்சம் உருவாகி இருந்தது. தற்போதைய நிலையில் எந்தவித ஆபத்தும் இல்லை என்று புவியியல் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




கலைஞர் 100
1924 - 2023
2வது இளைஞர் அணி மாநாடு 2023
நாள்: 17-12-2023 இடம்: சேலம்
மாநில உரிமைகளை மீட்க அழைக்கின்றார்
கழக இளைஞரணி செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர்களே அணி அணியாய் திரண்டு வாரீர்
மாபெரும் பிரச்சார பயணம்
நவ. 15 முதல் 27 வரை
13 நாட்கள் — 8,647 கி.மீ.
188 இருசக்கர வாகனங்கள்
504 பிரச்சார மையங்கள்
234 சட்டமன்ற தொகுதிகள்
DMK RIDERS
DMK RIDERS
குமரியில் இரு சக்கர வாகன பிரச்சார பேரணி தொடக்க விழா 15-11-2023
ரெ.மகேஷ் B.A.,BL.,
நாகர்கோவில் மாநகராட்சி மேயர்
குமரி கிழக்கு மாவட்ட செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க



நவம்பர்–15 புதுக்கோட்டையில்
ரூ.58 கோடி மதிப்பீட்டில்
பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை
மற்றும் துணை சுகாதார நிலையம்,
புறநோயாளிகள் பிரிவு, செவிலியர் குடியிருப்பு
ஆகியவற்றை காணொலி வாயிலாக திறந்து வைக்கும்
மாண்புமிகு.
தமிழ்நாடு முதல்வர்
அவர்களுக்கும்
கழக இளைஞர் அணி செயலாளர்,
இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு. மா.சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களுக்கும்
நன்றி! நன்றி!!
HOSPITAL
எஸ்.ரகுபதி B.Sc., BL.,
சட்டத்துறை அமைச்சர்,
மாவட்ட கழக செயலாளர்–புதுக்கோட்டை (தெ)
கே.கே.செல்லபாண்டியன்
மாவட்ட கழக செயலாளர்–புதுக்கோட்டை (வ)
புதுக்கோட்டை மாவட்ட திமுக



பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 135–வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (14.11.2023) சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எம்.எச். ஹாசன் மௌலானா, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணைமேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு தி.மு.க. முன்னாள் நகர செயலாளரும், தி.மு.க. தலைமைக் கழக பேச்சாளருமான மறைந்த கே.ஏ.முரசொலி முத்து உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டதி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், ப.இளையகோபால் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் மலரஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

### கனிமொழி கருணாநிதி - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சிறப்புரை!

# தூத்துக்குடியில்- “ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த கலைஞர்”- கருத்தரங்கம்!

## வடக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, நவ.15-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி யாரின் அறிவிப்புக்கு ஏற்ப தி.மு.க மாநில மகளிர் தொண்டரணி சார்பில் நவம்பர் 17ல் தூத்துக்குடியில் “ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த கலைஞர்” எனும் தலைப்பில் திருநங்கைகள் மாற்றுத் திறனாளிகள் பங்கு பெறும் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற உள்ளதாக பொறுப்பு அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழக சார்பு அணிகளின் சார்பில் இந்த ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும் என்ற தி.மு.கழக தலைவர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி மகளிர் தொண்டர் அணி சார்பில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை தமிழகம் முழுவதும் மண்டலம்வாரியாக நடத்திடவும், இதற்கு பொறுப்பு அமைச்சராக என்னையும் பணித்துள்ளார்கள்.

அதன்படி முதல் மண்டலமாக சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருப்புவனத்தில் இந்நிகழ்ச்சி கடந்த 01.10.2023 அன்று நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக 17.11.2023 அன்று தூத்துக்குடியில் இந்நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

பெயர் மாற்றத்தின் மூலம் மட்டுமல்லாது பல்வேறு சீர்மிகு திட்டங்களின் வாயிலாகவும் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகளை முன்னேற்றம் அடையச் செய்தவர் கலைஞர் என்பதை ”ஒதுக்கப்பட்ட வர்களை அரவணைத்த கலைஞர்” எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது.

இந்நிகழ்ச்சியானது 17.11.2023 வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு தூத்துக்குடி காமராஜ் கல்லூரி எதிரில் உள்ள ஆறுமுக நாடார் திருமண மண்டபத்தில் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளருமான பி.கீதாஜீவன் தலைமையில், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி. நாமக்கல் ராணி, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி. விஜிலாசத்தியானந்த் மாநில மகளிரணி பிரச்சாரக்குழு செயலாளர் திருமதி.ஜெஸி பொன்ராணி, தூத்துக்குடி மாநகர செயலாளர் ஆனந்தசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மேலும் விளாத்தி குளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வே.மார்க்கண்டேயன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சண்முகையா, தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன்பெரியசாமி, மாநகர துணை மேயர் திருமதி.ஜெனிட்டா, ஒட்டப்பிடாரம் மாவட்ட ஊராட்சிமன்ற தலைவர் பிரம்மசக்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்திருமதி. 5.ராமலெட்சுமி வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி.அ.கவிதாதேவி நன்றியுரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளருமான அனிதாராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு கலைஞரும், அவரை தொடர்ந்து தளபதியாரும் செய்த சாதனைகளை பட்டியலிடும் விதமாக தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய உறுப்பினரும், திருநங்கையுமான பியூட்டியும்,தென்மாவட்ட மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு நலச்சங்கத் தலைவர் ஈ.பியாசிலும், விளாத்தி குளம் அக்லூராட் மாற்றுத்திறனாகள் பள்ளியின் தாளாளர் தினேஷ் கனகராஜூம் உரையாற்ற இருக்கிறார்கள்.

மேலும் இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதித்த திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளை கௌரவித்து விருதுகள் வழங்கிடவும் இருக்கிறோம். அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவையை விண்ணப்பங்களாகப் பெற்று அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும், நிகழ்ச்சிகள் அனைத்தையும் அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சென்றும் விதத்தில் சமூக வலைதளம் வாயிலாக ஒளி பரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள், அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று நிகழ்ச்சியில் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### புலவர் இந்திரகுமாரி தலைமையில் – வி.பி.கலைராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# கழக இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - டி.கே.எஸ்.இளங்கோவன் - த.வேலு சிறப்புரை!

சென்னை, நவ. 15-

தி.மு.க. தலைமை இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர்கள் சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் 9.11.2023 மாலை 3.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகம், அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் நந்தனம் ச.நம்பிராஜன் வரவேற்புரையாற்றினார்.

புலவர் இந்திரகுமாரி கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

மு.தென்னவன், தஞ்சை கூத்தரசன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், செந்தலை கவுதமன், நா.செந்தில், ஈரோடு இறைவன், வி.வெங்கடாசலம், பேராசிரியர் சேவுக பெருமாள், பெருநாழி போஸ், நேரு பாண்டியன், பிரம்மபுரம் பழனி, கே.எஸ்.நாதன், தசரதன், ஆர்.எம்.டி.ரவிந்திரன், கோவை திராவிட மணி, ஆடுதுறை உத்திராபதி, ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக செய்தித் தொடர்பு பிரிவு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா.சந்திரபாபு நன்றி கூறினார்.

பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி. கலைராஜன் செய்திருந்தார்.

### குன்னம் சி.இராஜேந்திரன் முன்னிலை!

# பெரம்பலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. - க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1000 வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெரம்பலூர்மாவட்டத்தில்போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கல்லூரிகூட்டஅரங்கில்பயனாளி களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்மூலம்பணம்எடுக்கும் அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன், க.சொ.க.கண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.சியாமளா தேவிஆகியோர்முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில்மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வருவாய் கோட்டாட்சியர் (பொ) சத்தியபால கங்காதரன், தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் நீல்ராஜ், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள்மீனாஅண்ணாத்துரை(பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை(வேப்பூர்), மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட முன்னோடி வங்கிமேலாளர்பரத்குமார், பேரூராட்சி தலைவர்கள் ஏ.எஸ்.ஜாகீர்உசேன் (லெப்பைக்குடிக்காடு), சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), பாக் அனைத்து முதல்நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தலைமைக் கழக பேச்சாளர் கே.ஏ.முரசொலி முத்து மறைவு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. –எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி

திருச்செங்கோடு,நவ. 15-

திருச்செங்கோடு தி.மு.க. முன்னாள் நகர செயலாளரும், தி.மு.க.தலைமைக் கழக பேச்சாளருமான அங்கப்ப முதலியார் மகன் கே.ஏ.முரசொலி முத்து கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் 13.11.2023 திங்கட்கிழமை காலை 10.மணியளவில் சென்னை ராஜிவ் காந்தி மருத்துவ மனையில் சிகிச்சை பயனின்றி இயற்கை எய்தினார். மறைந்த முரசொலி முத்து கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை 15 ஆண்டுகளாக திருச்செங்கோடு நகரக் கழக செயலாளராகவும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தலைமைக் கழக பேச்சாளராகவும், திருச்செங்கோடு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்ற இவருக்கு கழகப் பணி சிறப்பாக செய்திட்டமைக்கு கடந்த 1984 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் லூனா இருசக்கர வாகனம் வழங்கி சிறப்பித்துள்ளார். இரண்டு முறை நகர மன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவருக்கு ஜெயலட்சுமி என்ற மனைவியும், கலைச்செல்வி, கோதை (எ) கோமதி இரண்டு பெண்கள், மகன் பிரபுலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

மறைந்தகே.ஏ.முரசொலி முத்து உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், ஈரோடு ப.இளையகோபால், நகர கழக செயலாளர்கள் தா.கார்த்திகேயன், த.விஜய் கண்ணன், அ.குமார், ஞானசேகர், நகர் மன்ற தலைவர்கள் நளினி சுரேஷ்பாபு, எம்.செல்வராஜ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள் மலரஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெங்கிடங்கால் சந்தானம்

### நவம்பர் 15 (2005)



நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மசோதாக்கள் ஒப்புதலுக்கு காலக்கெடு!

# உச்சநீதிமன்றத் தீர்ப்பு மூலமாவது நல்லுறவு ஏற்பட வேண்டும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ.15-

மசோதாக்கள் ஒப்புதலுக்கு காலக்கெடு குறித்து உச்சநீதிமன்றம் வழங்கும் தீர்ப்புமூலம் எதிர்காலத்தில் ஆளுநர்களுக்கும் மாநில அரசாங்கங்களுக்கும் மோதல் இல்லாமல் நல்லுறவு ஏற்பட வேண்டுமென ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

இந்திய அரசியல் சட்டப்படி, ஒவ்வொரு மாநிலத்துக்கும் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படும் கவர்னர் ஒருவர் இருப்பார். மாநிலத்தின் அன்றாட நிர்வாகம் முதல்-அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் கையில் இருந்தாலும், சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள், அரசின் முக்கிய உத்தரவுகள் கவர்னரின் ஒப்புதலை பெறவேண்டும். அரசியல் சட்டத்தில் கவர்னருக்கு அனுப்பப்படும் மசோதாக்கள் மீது அவர் எத்தனை நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக என்றுதான் கூறப்பட்டுள்ளது.

சமீப ஆண்டுகளாக, பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில், கவர்னர்களுக்கும் மாநில முதல்-மந்திரிகளுக்கும் சுமுக உறவு இல்லாததால், நிர்வாகத்தில் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, தமிழ்நாடு, பஞ்சாப், கேரளா மாநிலங்களில் அரசு அனுப்பிய மசோதாக்களுக்கு கவர்னர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறி, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தெலுங்கானா மாநிலத்திலும் இவ்வாறு கவர்னர் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போட்டவுடன், கவர்னர் ஒப்புதல் அளித்துவிட்டதால், அந்த வழக்கு தொடர்ந்து நடக்கவில்லை.

இப்போது ஆம் ஆத்மி ஆட்சி செய்யும் பஞ்சாப்பில், முன்பு தமிழக கவர்னராக இருந்த பன்வாரிலால் புரோகித் கவர்னராக இருந்து வருகிறார். அம்மாநில அரசு, “சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பிய 5 மசோதாக்களை கவர்னர் கிடப்பில் போட்டுள்ளதால் நிர்வாகத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது” என்றுகூறி, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட பெஞ்சு, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை வழங்கியுள்ளனர்.

“சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குமாறு கவர்னருக்கு உத்தரவிடக்கோரி, சுப்ரீம் கோர்ட்டை அணுக வேண்டிய கட்டாயத்துக்கு மாநில அரசாங்கங்கள் தள்ளப்பட்டு இருப்பது கவலையளிக்கிறது. மசோதாக்களை



தலையங்கம்
தினத்தந்தி
14.11.2023 (செவ்வாய்க்கிழமை)
மசோதாக்கள் ஒப்புதலுக்கு காலக்கெடு வேண்டும்

ஆய்வு செய்ய கவர்னர்களுக்கு அனைத்து அதிகாரமும் இருக்கிறது. ஆனால், இப்படி சுப்ரீம் கோர்ட்டுக்கு வருவதற்கு முன்பாகவே ஒப்புதல் வழங்க வேண்டும். கவர்னர்கள் தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது. கவர்னர்களும், மாநில அரசுகளும் மோதல் போக்கை கடைப்பிடிப்பது கவலையளிக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகளை கவர்னர்களும், முதல்மந்திரிகளும் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். இருவரும் ஆத்ம பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்” என்று கூறியுள்ளது.

மேலும், பஞ்சாப் அரசாங்கத்தை போல தமிழ்நாடு, கேரளா அரசாங்கங்கள் சார்பிலும், கவர்னர்கள் கிடப்பில் வைத்திருக்கும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கோரிய வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து கடந்த 10ந்தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தமிழக மற்றும் பஞ்சாப் கவர்னர்களுக்கு கடும் கண்டனங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த பிரச்சினைக்கு சுப்ரீம் கோர்ட்டு தான் ஒரு முடிவை தெளிவான தீர்ப்பு மூலம் கூறவேண்டும். எல்லா விஷயங்களிலும் ஒரு தெளிவான வழிகளைக்காட்டும் இந்திய அரசியல் சட்டத்தில், கவர்னருக்கு அனுப்பப்படும் மசோதாக்களுக்கு எவ்வளவு நாட்களுக்குள் பதில் அனுப்பப்பட வேண்டுமென்ற காலக்கெடு மட்டும் இல்லை. எவ்வளவோ திருத்தங்களை அரசியல்சட்டம் பார்த்துவிட்டது. மசோதாக்களில் கவர்னர்கள் கையெழுத்திட எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக என்றால், எவ்வளவு காலத்துக்குள் என்பதற்கு சுப்ரீம் கோர்ட்டு ஒரு தீர்ப்பு கூறி, அதற்காக அரசியல் சட்டத்தை திருத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த காலக்கெடு குறித்தும் சுப்ரீம் கோர்ட்டு வழங்கும் தீர்ப்பு மூலம் எதிர்காலத்தில் கவர்னர்களுக்கும், மாநில அரசாங்கங்களுக்கும் மோதல் இல்லாமல் நல்லுறவு ஏற்பட வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் மேல்மாந்தை கிராமத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச்சிலையை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன் திறந்து வைத்தார். சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் திருஉருவச்சிலையை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையாவும் திறந்து வைத்தார்கள். நிகழ்வில் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, மாவட்டத் தலைவர் முனியசாமி, முன்னாள் விடுதலைச் சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் கதிரேசன், பெரியார் செல்வம், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் ஆர்.காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

ராணிப்பேட்டை நவ.15-

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ்அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழகக் கொடி ஏற்றுவிழா நிகழ்ச்சி இன்று (15.11.2023-புதன்கிழமை) காலை 10மணிக்கு பாராஞ்சியில் நடக்கிறது.

நிகழ்ச்சிக்கு அரக்கோணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ.சவுந்தர் தலைமை தாங்குகிறார். கிளைக் கழக பொறுப்பாளர் டி.ஜெயபால் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய இணை அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கொடி ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்கள். மாநில சுற்று ச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, சோளிங்கர் தொகுதி பொறுப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ. சி.ஞானசேகரன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும்ஆற்காடு சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.எல் ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், மாவட்டப் பொருளாளர் ஏ.வி.சாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க.சுந்தரம், அ.அசோகன், ஒன்றியக் குழு தலைவர் நிர்மலா சவுந்தர், நகராட்சி தலைவர் லட்சுமி பாரி, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.சிட்டி பாபு, எம்.கிருஷ்ணன், அ.அப்துல்நசீர், நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆர்.தமிழ் செல்வன், கே.பசுபதி, பி.வடிவேலு, எஸ்.ஜி.சி.பெருமாள், எஸ்.நாகராஜன், ஆர்.பி.ரவீந்திரன், கிருஷ்ணமூர்த்தி, என்.பூர்ண சந்திரன், எஸ்.சந்திரன், நகரச் செயலாளர்கள் எம்.கோபி, எம்.தெய்வசிகாமணி, பேரூர் செயலாளர் பாஸ்என்றநரசிம்மன் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.




### இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியம்

# பட்டாசு விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.15-

இராணிப்பேட்டை மாவட்டத்தில் பட்டாசு வெடித்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, திமிரி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சியில் தீபாவளியன்று பட்டாசு வெடித்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் சிறுமி நவிஷ்கா (வயது 4) த/பெ. ரமேஷ் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கும் அவருடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாயும், இவ்விபத்தின்போது பலத்த காயமடைந்த விக்னேஷ் என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் - தேனி நெடுஞ்சாலையில்

# சாலை விபத்துக்களை தடுக்க நடவடிக்கை!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ,பெரியசாமி உறுதி!

திண்டுக்கல், நவ.15-

திண்டுக்கல் - தேனி நெடுஞ்சாலையில் பித்தளைப்பட்டி பிரிவு செம்பட்டியில் மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோரிக்கை மனு கொடுத்த ஊராட்சிமன்ற தலைவர்களிடம் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்ததோடு கிராம ஊராட்சிகளில் புதிய தார்ச்சாலை, தெருவிளக்கு வசதி, 100 சதவிகிதம் குடிதண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், திமுக மாநிலதுணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு நலத்திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார். அப்போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனுமந்தராயன்கோட்டை ஊராட்சிமன்ற தலைவர் நிர்மலா இன்பராஜ் ஆகியோர் திண்டுக்கல் தேனி சாலையில்பித்தளைப்பட்டி பிரிவு பகுதியில் அடிக்கடி சாலை விபத்து ஏற்படுவதால் பலர் உயிரிழந்து வருகின்றனர். இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் பூங்கொடி அவர்களை தொடர்புகொண்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அடிக்கடி விபத்து நடக்கும் பித்தளைப்பட்டி பிரிவு மற்றும் செம்பட்டியில் மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூறியதோடு ஏற்கனவே நான்கு வழிச்சாலை உயர்அதிகாரிகளிடம் இதுகுறித்து மனு கொடுத்துள்ளோம் என்றார்.

அதன்பின்னர் ஊராட்சி மன்றத் தலைவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி மாவட்ட ஆட்சியர் இதுகுறித்து சாலைபாதுகாப்பு ஆய்வு கூட்டத்தின் போது பேசி விரைந்து நடவடிக்கை எடுப்பார் என்றார். அதன்பின்னர் பல்வேறு தரப்பட்ட மக்கள் வேலை வாய்ப்பு உட்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு பெற்றனர். நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் ஒன்றியச் செயலாளர் ப.க.சிவ குருசாமி, நிலக்கோட்டை ஒன்றியச் செயலாளர் மணிகண்டன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், தி.மு.க. நிர்வாகிகள் மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர் ரேகாஅய்யப்பன், மாவட்டத் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் அகரம் நந்தகோபால், கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், அகரம் பேரூராட்சிமன்ற துணைத்தலைவர் ஜெயபால், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், அனுமந்தராயன்கோட்டை ஊராட்சிமன்றத் தலைவர் நிர்மலா இன்பராஜ், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, சித்தையன்கோட்டை பேரூர்க் கழக முன்னாள் செயலாளர் குட்டியப்பா (எ) காதர் மைதீன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், சுமதி கணேசன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன், அய்யம்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த சுந்தர், பொன்னுமாந்துரை தி.மு.க. நிர்வாகி அறிவழகன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா - 'எழுத்தாளர் கலைஞர்' குழு சார்பில்

# சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்த 'முத்தமிழ்த்தேர்' அலங்கார ஊர்தி!

## குழுத் தலைவர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வரவேற்று மரியாதை!

சிவகங்கை, நவ. 15-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கலைஞர் அவர்களின் புகழை போற்றிடும் வகையில், "எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்த முத்தமிழ்த் தேர்: அலங்கார ஊர்தியினை, "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வரவேற்று, கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் சார்பில், சிவகங்கை மாவட்டத்திற்கு நேற்று (14.11.2023) வருகை புரிந்த "முத்தமிழ்த் தேர்" அலங்கார ஊர்தியினை, "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், மானாமதுரை நகராட்சிக் குட்பட்ட பகுதியில் வரவேற்றார்.

அப்போது அவர் தெரிவிக்கையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அதனை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிடும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றான, "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகள் மற்றும் அவரது பரிமாணங்களை போற்றிடும் வகையில், பல்வேறு முன்னெடுப்புக்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், இன்றைய இளம் தலைமுறையினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை எடுத்துக்கூறும் வகையிலும், எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், கலைஞர் அவர்களின் புகழ் பாடும் "முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி" தயார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வூர்தியினை மிக நேர்த்தியான முறையிலும், கலைநயத்துடனும் திறன்மிக்க சிற்பியைக் கொண்டும், கூட்டுறவுத்துறைக்கென நியமிக்கப்பட்டுள்ள செய்தி மக்கள் தொடர்புதுறையைச் சார்ந்த அலுவலர் ஆகியோர்களின் துணை கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இத்தருணத்தில் அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த அலங்கார ஊர்தியின் வாயிலாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ்ச் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும் தமிழகம் முழுவதும் பறைசாற்றுகின்ற வகையில் அனைத்து மாவட்டங்களுக்கு பயணிக்கின்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில்,"முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி துவக்கி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இந்த அலங்கார ஊர்தியானது பயணிக்கப்பட்டு, அதன்படி, நேற்றைய தினம் (14.11.2023) நமது சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளது. அதில், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இவ்வூர்தியானது தொடங்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட அரண்மனை வாசல் அருகிலும், திருப்பத்தூர் அண்ணா சிலைஅருகிலும் மற்றும் காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபம் அருகிலும், இவ்வூர்தியானது காட்சிப்படுத்தப்பட உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில், "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நிகழ்வுகளில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என "எழுத்தாளர் கலைஞர்" குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மோகனச்சந்திரன், மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, திருப்பத்தூர் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், முன்னாள் அமைச்சர் தென்னவன், மானாமதுரை நகராட்சி ஆணையாளர் திருமதி. ரங்கநாயகி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரைக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் சார்பில் தயாரான முத்தமிழ்த்தேரினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வரவேற்றார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், கூட்டுறவு சங்க தலைவர் த.சேங்கைமாறன், ஊராட்சிமன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன்கென்னடி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ, மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு உறுப்பினர் இ .ஜி .சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் காஞ்சனாகமலநாதன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*கிருஷ்ணகிரி , நவ. 15 -*

கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிப்பது என தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. இக்கூட்டத்தில் அமைச்சர்அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர்காஞ்சனா கமலநாதன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் வருகிற 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகை தந்து முத்தமிழர் அறிஞர் தலைவர் கலைஞர் சிலையை திறந்து வைத்து, மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. இல்ல திருமண வரவேற்பு விழா, கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப் இல்ல திருமண விழா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் இல்ல திருமண விழாக்களில் கலந்து கொள்வதற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பளிப்பது எனவும்,

திராவிட முன்னேற்ற கழக மாநில இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையில் சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெற உள்ள திமுக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும், இந்தியா நாடே உற்று நோக்கும் திட்டமான தமிழகத்தில் உள்ள மகளிர் மேம்பாடு அடைய வேண்டும் என்ற சீரிய நோக்கில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் வழங்கிய கலைஞர் மகளிர் உரிமை திட்டம் இரண்டாம் கட்டமாக வழங்கிய கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, புஷ்பா சர்வேஷ், சின்னசாமி, வீரா ரெட்டி, தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் கிருபாகரன், பரிதா நவாப், நாகராசன், பாலன், அஸ்லாம், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், எல்லோரா மணி. கிரீஸ், ஜெயராமன், அருணா பூசன், அப்துல் கலாம், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் , தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண. வசந்தரசு, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குமரேசன் சீனிவாசலு ரெட்டி, திவாகர். ரகுநாத், நாகேஷ், சின்ராஜ். பாக்கியராஜ் கஜேந்திர மூர்த்தி, ராஜா, கருணாகரன், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பி துரை, வெங்கடப்பன், பாபு சிவகுமார், சீனிவாசன். தஷ்தகீர் உள்ளிட்ட மாவட்ட , ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில்

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார்அறிக்கை!





*திண்டுக்கல், நவ. 15 -*

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் செய்திடகடந்த 27.10.23 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் திருத்தம் செய்வதற்கும் வசதியாக வருகிற 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நமது கழக அரசு, வருகின்ற 18ஆம் தேதியை பணி நாளாக அறிவித்துள்ளதால் அன்றைய தினம் மற்றும் 19ஆம் தேதி ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்த சிறப்புமுகாம் 25.11.23 சனிக்கிழமை மற்றும் 26.11.23 ஞாயிற்றுக்கிழமை ஆகியதேதிகளில் நடைபெறும் எனதேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் திண்டுக்கல் கிழக்குமற்றும் மேற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சார்பு அணிநிர்வாகிகள், அந்தந்த வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) வாக்குச் சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினைபயன்படுத்திவாக்காளர்பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப் பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள் கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் சிறப்பு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை !



*மதுரை, நவ. 15 -*

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மத்திய, மதுரை மேற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு ஆகிய தொகுதிக்கான வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) (BLC)கூட்டம் கீழ்க்கண்டவாறு பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற உள்ளது.

தொகுதி தேதி நேரம் பற்றிய விவரம் வருமாறு :

1. மதுரை மத்திய தொகுதி 16.11.2023 - வியாழக்கிழமை மாலை 5:00 மணி,

2. மதுரை மேற்கு தொகுதி 16.11.2023 - வியாழக்கிழமை மாலை 7:00 மணி,

3. மதுரை வடக்கு தொகுதி 17.11.2023 - வெள்ளிக்கிழமை மாலை 5:00 மணி ,

4. மதுரை தெற்கு தொகுதி 17.11.2023 - வெள்ளிக்கிழமை மாலை 7:00 மணி,

இந்நிகழ்வில்பகுதி, வட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் வாக்குச் சாவடி முகவர்களுடன் (BLA2)(BLC) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சங்ககிரி மேற்கு முரசொலி முகவர்

# எஸ்.கோபாலன் இல்ல மணவிழா வரவேற்பு!

## கழகத்தினர் வாழ்த்து!



*சென்னை, நவ.15 -*

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் வட்டம் படை வீடு கிராமத்தைச் சேர்ந்த சங்ககிரி மேற்கு முரசொலி முகவர் எஸ். கோபாலன் - ஜி.பார்வதி இணையரின் மகள் ஜி. தமிழ்அமுதம், ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் எண்ணமங்கலம் கிராமம் ஆர்.சண்முகம், தெய்வத்திரு எஸ். விஜயலட்சுமி இணையரின் மகன் எஸ். கார்த்திகேயனுக்கும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நாளை (16.11.2023 - வியாழக்கிழமை) காலை 8 மணிக்கு. அந்தியூர் காட்டூர் பவானி மெயின் ரோட்டில் உள்ள பிருந்தாவன் மஹாலில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பில் கழகத்தினரும், மணமக்களின் உறவினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. பெரியண்ணன்

**நவம்பர் 15 (1996)**



புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளராக 1974ஆம் ஆண்டு முதல் பல்லாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இருமுறை சட்டப்பேரவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது அரசின் கொறடாவாக பணியாற்றினார்.

“அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார். இது செய்தி அல்ல. என் இதயத்தில் மட்டுமல்ல கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்த மாவட்டத்தின் புலிப்போத்து அவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருதி’னை வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை டி. சுந்தரம்

**நவம்பர் 15 (2012)**



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிரூபித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




2 வது இளைஞரணி மாநாட்டில் இணைவோம் ! மாநில உரிமை மீட்போம் !

2 வது இளைஞர் அணி மாநாடு 2023



# 2 வது இளைஞர் அணி மாநாடு

நாள் : 17 - 12 - 2023 இடம் : சேலம்

## குமரியில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியை தொடங்கி வைப்பவர்

கழக இளைஞர் அணி செயலாளர்

மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்

இடம் : கன்னியாகுமரி
நாள் : 15.11.2023 நேரம் : காலை 11.15

மாபெரும் பிரச்சார பயணம்
நவம்பர் 15 முதல் 27 வரை
13 நாட்கள் - 8,647 கி.மீ.

188 இருசக்கர வாகனங்கள்
504 பிரச்சார மையங்கள்
234 சட்ட மன்ற தொகுதிகள்




மாநில உரிமைகளை மீட்க அழைக்கின்றார் நம் சின்னவர்
இளைஞர்களே அணி அணியாய் திரண்டு வாரீர்

மாண்புமிகு **அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
அமைச்சர் – பள்ளிக் கல்வித்துறை
மாவட்ட செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்டம்

அன்புடன்

**அ.ராஜா தமிழ் மாறன்**

RKK.கார்த்தி, P.பிரபின்
வள்ளுவர் மண்டலம்

M.S.ராஜ்குமார், P.G.சன் சுரேஷ்
பெரியார் மண்டலம்

K.குட்டி, T.R.ரவிச்சந்திரன்
அண்ணா மண்டலம்

பர்மா M.ரூபன், G.முத்துக்குமார்
கலைஞர் மண்டலம்

# திராவிடப் போராளிகள்

43 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## அலர்மேலு : முதல் 30 பேரில் ஒரே பெண் தலைவர்



ஓவியம் : ரவி பேலட்

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் திராவிடப் போராளிகளில் மூத்தவர் என்று சொல்வதற்கான தரவுகள் அவர் பங்கேற்ற நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகளில்தான் கிடைக்கின்றன.

அவற்றிலிருந்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சென்னை எழும்பூர் பகுதியில் வாழ்ந்தவர். வசதி வாய்ப்புகள் நிறைந்த குடும்பப் பின்னணி உடையவர். கடவுள் நம்பிக்கையும் காந்தியக் கொள்கையில் ஈடுபாடும் கொண்டவர்.

பார்ப்பனர்களின் சாதி ஆணவப் போக்கினை தன் அனுபவங்களால் உணர்ந்தவர். அதனால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டுள்ளது. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முதல் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற முப்பது பேரில் அவர் மட்டுமே பெண் தலைவர் என்பது அவரது ஆளுமைக்குச் சான்று.

### மூன்று செய்திகள்

அவரைப்பற்றிய மூன்று செய்திகள் மிக முதன்மையானவை.

1914 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சாதி அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென்றும், பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும்,பெண்களின் சொத்துரிமை, சாதி மறுப்புத் திருமணம் செய்யும் உரிமை ஆகியவற்றைக் காக்க சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து, வலியுறுத்தி உரையாற்றினார் என்ற செய்தி, 1914 ஆம் ஆண்டு டிசம்பர் 'நியூ இந்தியா' ஏட்டில் வெளிவந்ததாக ஒரு மின் ஆய்வு நூல் குறிப்பிடுகிறது. 'நியூ இந்தியா' என்ற நாளிதழை நடத்தியவர் அன்னி பெசன்ட் அம்மையார்.

1927 ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' ஏடு அம்மையாரை மரியாதை குறைவாகக் குறிப்பிட்டதும் பின்னர் அதற்கு சமாதானம் கூறியதும், குறித்த முழுமையான தகவல்களை இன்றைய தலைமுறை கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

காங்கிரசு இயக்கத்திலும் காந்தியார் மீதும் மதிப்பு கொண்டிருந்த, வசதிபடைத்த, பார்ப்பனரல்லாத ஒருவருக்கு, 'சுதேசமித்திரன்' பத்திரிகை எப்படிப்பட்ட அவமரியாதையை இழைத்தது என்பதை, 1927 அக்டோபர் 'திராவிடன்' இதழில் 'பிராமணர்களும் பெண்மானமும்' என்ற தலைப்பில் அவரே எழுதிய கட்டுரை விளக்குகிறது.

சாதி ஏற்றத்தாழ்வும் சாதிக்கு ஒரு நீதியும் சொல்லும் சனாதனமும் என்பது சாதியமைப்பின் மேல்நிலையில் இருப்பவர்களுக்கு அளவற்ற மரியாதையைக் கொடுக்கும். மற்றவர்களை மனிதராகவே மதிக்காது என்பதற்கு இந்த நிகழ்வே எடுத்துக்காட்டு.

### 'சுதேசமித்திரன்' சாதிப் பற்று

எந்தக் கூட்டத்தில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பேசியதை 'சுதேசமித்திரன்' பத்திரிக்கை மரியாதையின்றி எழுதியது என்ற விவரத்தையும் அம்மையாரே கூறுகிறார்.

"மித்திரன் பத்திரிகை ஒன்றிருக்க ஒன்றெழுதி வருகின்றது. அவமரியாதையிலும் கை எழுத ஓடுகின்றது. மகாத்மா காந்தி அவர்களுக்கு 9.9.27 இல் பெண்கள் பணமுடிப்பு கொடுத்த சமயத்திலும், ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வந்தனம் கூறினாள் என்று ஒரே ஒரு வாக்கியத்தில் எழுதியது. அவ்வாக்கிய முடிவும் அவமதிப்பிலே முடிந்தது. இதையெல்லாம் விபரீதமாய் நினைக்கப்படாதென்றாலோ, நானும் மற்றவர்களும் அப்படியே விபரீதமாய் நினைக்காதபடி, லேடி சதாசிவ அய்யர் காந்தியைப் புகழ்ந்து பேசினாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் காந்திக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தாள், பிரம்மஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தான் என்று எதார்த்தமாய் எல்லாரையும் ஏகவசனமாய் ஏற்றத்தாழ்வின்றி அவசியம் எழுதியிருக்க வேண்டும். அப்பொழுது என்னைப்பற்றி எழுதியதும் எதார்த்தமென்று நினைப்பேன். மற்றவர்களும் நினைப்பார்கள். என்னை மட்டும் 'வந்தனம் கூறினாள்' என்று ஏகவசனமாய் எழுதவேண்டியது என்ன??."

ஒருவேளை முத்துலட்சுமி அம்மையாரையும் மரியாதைக் குறைவாக எழுதி இருந்தால் அலர்மேலு மங்கைத் தாயாருக்கு வருத்தம் வந்திருக்காதோ என்று நம் மனதில் ஓடும் கேள்விக்கு அடுத்த வரியில் அவரே பதில் சொல்கிறார்.

"ஸ்ரீமதி, சகோதரி முத்துலட்சுமி அம்மாள் அவர்களையும் மற்றவர்களையும் அகௌரவப்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. சூது வாதின்றி எல்லாரையும் கௌரவப்படுத்த வேண்டுமென்பதே என் நோக்கம். அவைகளை எடுத்துக் காட்டாவிட்டால் எப்படித் தெரியும்?"

இதற்கும் கூட சிலர் அது அந்தக் காலத்துப் பத்திரிகை மொழி என்று சமாதானம் சொல்ல முயல்வார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்கிறார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதேபோல் மரியாதை என்பது எல்லோருக்கும் உரிமையானது என்றும் கூறுகிறார்.

"சுதேசமித்திரனைத் தவிர வேறெந்தப் பத்திரிகையும் ஏகவசனமாய் எழுதுவதில்லை. பிராமணர்களைத் தவிர மற்றெவரையும் அவள் இவள் என்று ஏகவசனத்தில் பேசுவதுமில்லை. பிராமணர்கள் தமிழ் பேசவும் எழுதவும் தெரியாதவர்களா? வெளிப்பட வேண்டும். எந்த ஜாதியாயினும், எந்த மதமாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், உயர்வாயினும், தாழ்வாயினும், யாராயினுஞ்சரி கௌரவமாக எழுதுவதல்லவோ ஒரு பத்திரிகையின் லக்ஷணம்".

### சனாதன மித்திரன் பரம்பரை

இந்தியப் பெண்களுடைய மரியாதையை மிஸ் மேயோ குறைத்துவிட்டார் என்று புலம்பிய 'சுதேசமித்திரன்', இந்திய (பார்ப்பனரல்லாத) பெண்களுக்கு என்ன மரியாதை கொடுத்தது என்ற அம்மையாரின் கேள்வி 'சுதேசமித்திரனின்' சாதி முகத்திரையைக் கிழித்துக் காட்டியது. மேலும் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அலர்மேலு மங்கை தாயார் புதியவருமல்ல என்ற உண்மையையும் அம்மையார் அம்பலப்படுத்தினார்.

"இத்தேசத்திற்கு முற்றும் சம்பந்தமில்லாத ஓர் அமெரிக்க தேசப்பெண் இராஜதந்திரத்திலே இத்தேசப் பெண்களின் பெருமையை குறைவுபடுத்தினார் என்று ஆகாயமளவுமட்டும் எட்டி எட்டிக் குதிக்கின்றவர்கள், இத்தேச மாதரின் மரியாதை விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? உள்ளதைச் சொன்னால் உடம்பெரியலாம். 1903 வருஷம் முதற்கொண்டு மித்திரன் பத்திரிகைக்கு விஷயதானத்திலே சம்பந்தப்பட்டுள்ளேன்.

பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்களை குறிப்பாக ஜாதி, மதம், ஆணாதிக்கம் இவற்றுக்கு எதிரான தத்துவங்களை முன்னெடுக்கும் பெண்களை இழிச்சொற்களால் அவமானப் படுத்துவது தெய்வபக்தி, தேசபக்தி என்ற பெயரால் இன்றும் அரசியல் செய்பவர்களின் வரலாறு என்பதற்கு இதைவிட, வேறு உதாரணம் தேவையில்லை.

ஏறக்குறைய 25 வருட காலமாய் என் சுய நன்மையை வெறுத்து பொது நன்மையை நாடி வேலையும் செய்தேன். ஆயினும் 'பெண்மானம்' என்பதைக் கவனியாத பெரியோர்கள் ஓர் பெரியோர்களா? இன்று என்னை அவள் இவள் என்று எழுதவும் பேசவும் முன்வந்தவர்கள் நாளை எவரையும் கேவலமாய் எழுத ஏன் துணியார்கள்?

இவர்களின் தேசாபிமானம் பற்றி எள்ளி நகையாடுகிறது அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் கட்டுரை.

மதுரை ஸ்ரீஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னபடி பிராமணர்களுக்கு அநேகமாய் சுயஜாதி அபிமானமே அவர்களுடைய தேசாபிமானம். சுயராஜ்யம் வந்தால் நம்மை எந்நிலையில் வைப்பார்களோ? தேசம் எந்நிலையில் இருக்குமோ தெரியவில்லை. சுயராஜ்யமும் வரவேண்டியதே; வருவதற்குமுன் முக்கியமாய் பிராமணர்களும் மற்றவர்களும் திருந்த வேண்டும். கதர் உடுத்தி காந்திக்கு ஜே! என்று கத்திக் கதறி கல்லெடுத்தெறிகின்றார்கள். காந்தியடிகள் பெயரை ஒட்டியே இவ்வளவு விபரீதம் நடக்கின்றது. காந்தியடிகள் செவிக்கு அவ்வக்கிரம் எட்டுமோ எட்டாதோ ஈசனே அறிய வேண்டும். காந்தியடிகளை அவதாரமாக்கினும் அவர்சொன்னபடி நடப்பவர்தான் இலர். நிற்க...."

இந்தக் கட்டுரையின் முடிவில் இன்னொரு நிகழ்வைப் பற்றியும் அம்மையார் குறிப்பிடுகிறார்.

"நுங்கம்பாக்கம் (27.9.27) மீட்டிங்கிலும் நான் பேசினபோது பிரஸிடென்ட்டாய் இருந்த பிராமணர் எம்.ஏ.எல்.டி அய்யங்கார் அவர்களும் சபையாருக்கு என்னைப்பற்றி அறிவிக்கும்போது 'பேசுவாள்' என்றே சொன்னார். என்ன விபரீதம் பாருங்கள்".

இந்த விபரீதத்தைத்தான் இன்றைக்குச் சனாதனம் என்ற பெயரில் மீண்டும் நிறுவத் துடிக்கிறது மித்திரன் பரம்பரை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

### மாண்டிசோரி பள்ளி

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் இறுதிக் காலம் குறித்துக் கிடைத்துள்ள மற்றொரு செய்தியும் அவரது பேருள்ளத்துக்குச் சான்றாகி நிற்கிறது.

சென்னையின் மையப் பகுதியான சிந்தாதிரிப்பேட்டையில் அலர்மேலு மங்கை தாயாரம்மாள் மாண்டிசோரி பள்ளி என்ற பெயரில் தொடக்கப் பள்ளி ஒன்று இன்றும் கல்விப் பணியாற்றி வருகிறது. ஏற்கெனவே செயல்பட்டு வந்த அந்தப் பள்ளியின் மேம்பாட்டுக்காகத் தனது இடத்தை அலர்மேலு மங்கை தாயாரம்மாள் தானமாக வழங்கியதாகவும் அதனால் அவரது பெயர் பள்ளிக்குச் சூட்டப்பட்டதாகவும் பள்ளி நிர்வாகி ஒருவர் கூறினார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணியாக அலர்மேலு மங்கைத் தாயாரின் பதிவுகள் அங்கும் இங்குமாகக் கிடைக்கின்றன. சுயநன்மையை வெறுத்துப் பொது நன்மையை நாடி பணியாற்றிய திராவிடப் போராளிகளின் முன்னோடியான அவரது வாழ்க்கைச் செய்திகளை முழுமையாக வெளிக்கொணர வேண்டியது நமது கடமையாகும்.

(வருவார்கள்...)

## ஒடிசாவில் பெருமை சேர்க்கும் தமிழர்



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளி மாநிலங்களில் ஆட்சிப்பணி அதிகாரிகளாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பாராட்டப்படுகின்றனர். அந்த வகையில் ஒடிசா மாநிலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி வி.கே. பாண்டியன், அந்த மாநிலத்தில் அமைச்சர் அந்தஸ்தில் பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவர் பிஜூ ஜனதா தளம் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறி பாரதிய ஜனதா கட்சியினர் அவர் வீட்டின் மீது 2018 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தினர்.

பிஜூ பட்நாயக்கின் தனிச்செயலாளராக இருந்த இவரின், விருப்ப ஓய்வுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்த நிலையில், ஓய்வுபெற்ற அடுத்த நாளே பட்நாயக் அமைச்சரவையில் அமைச்சர் அந்தஸ்தில் பொறுப்பேற்றுள்ளார்.

அரசின் திட்டங்களை ஒருங்கிணைக்கும் '5T' எனப்படும் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே ஒடிசா மாநிலத்தில் பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்.பாலகிருஷ்ணன் செயல்பட்டுப் பெருமை சேர்த்தார். தற்போது வி.கே.பாண்டியனின் பணியும் சிறக்க வேண்டும். தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

## :.ப்ளாஷ்பேக்





### கலைஞரின் ஆறுதல்!

1995 ஆம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் மறைந்த பொழுது, மறுவாரத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் குன்றக்குடிக்கு வருகை தந்து நமக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் புகைப்படத்துக்கு மாலை அணிவித்தும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் சமாதியில் மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினார்கள்.

-குன்றக்குடி ஆதீனம்,
தவத்திரு பொன்னம்பல அடிகளார் .

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### ஆளுநருக்கு எதிர்ப்பு

**1958 பிப்ரவரி 8 ஆம் தேதி, சட்ட மன்றத்தில் ஆளுநர் உரையைக் கழகம் புறக்கணித்தது. அதற்கு முன்பு அறிஞர் அண்ணா ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். "வடநாட்டைச் சேர்ந்தவர்களை இந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிப்பதற்கு எதிராக, இந்த நாட்டு மக்கள் தெரிவித்திருக்கும் உறுதியான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடநாட்டவரையே ஆளுநராக நியமிக்கும் கொள்கையை ஆட்சேபிக்கும் வகையில் சட்டசபை கூடும் நாளில் ஆளுநர் உரையாற்றும்போது அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று தி.மு.கழக சட்டசபைக் கட்சி ஒருமனதாக முடிவு செய்கிறது" என அறிவித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 300




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131